27th March 1969]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** (அ) கட்டிடத்தின் கீழ்த்தள வேலைகள் எல்லாம் முடிவடைந்துவிட்டன. முதல் மாடிப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேறி வருகின்றன. இது சம்பந்தப் பட்ட எல்லா வேலைகளும் 30—9—1969-க்குள் முடிக்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) புதிய கட்டிடத்தில் வழக்குரைஞர் அறை கட்டும் ஏற்பாடு எதுவும் இல்லை.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் அறைகள் இருக்க வேண்டியதுதான். அத்துடன் பொதுமக்களுக்கும் இடவசதி வேண்டும். இப்போது தமுக்கம் மைதானத்தில் ஊருக்கு ரொம்ப தூரத்தில் அது இருப்பதால் வசதிகள் எதுவும் இல்லாமல் இருக்கிறது. மேலூர்–திருப்பத்தூர் ரோடில் இருக்கிறது. கட்சிக்காரர்கள் போகும்போது அவர்கள் தங்குவதற்கும் கேன்டீன் வசதி போன்றவை இல்லாமல் இருக்கிறது. அதற்கான கட்டிடம் கட்ட ஏதாவது திட்டம் போடப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாஷா :** நீதி மன்றக் கட்டிடத்திற்கான குறிப்பு இருக்கிறது. கேன்டீன் வைப்பதற்கு வழக்கறிஞர்கள் ஏற்பாடு செய்வார்கள். நீதிபதிகள் அதைக் கவனிப்பார்கள்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** இப்போது கட்டப்படுகிற புதிய நீதி மன்றக் கட்டிடம் ராமநாதபுரம் மாவட்டத்திற்கும் சேர்த்துக் கட்டப்படுகிறதா ? ராமநாதபுரத்திற்குத் தனித் தலைநகரம் ஏற்பட்டுவிட்டால் அங்கே மீண்டும் கட்டிடம் கட்டப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாஷா :** தனித் தலைநகரம் ஏற்படும் போது அதைக் கவனிக்கலாம்.

*Staff Quarters near dam sites.*

*253 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present use of the buildings constructed originally as staff quarters etc., in the areas of the Periyar Lower Camp, the Manimuthar Dam, the Vaigai Dam, the Vidur Dam, the Krishnagiri Anicut, the Sathanur Dam, the Amaravathi Dam and the Bhavani Dam in Coimbatore district ?

**அணைக்கட்டு அருகில் உள்ள குடியிருப்புகள்.**

**திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு** (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

கோவை பவானி அணைக்கட்டு, அமராவதி அணைக்கட்டு, சாத்தனூர் அணைக்கட்டு, கிருஷ்ணகிரி அணைக்கட்டு, வீடூர் அணை, வைகை அணை, மணிமுத்தாறு அணை, பெரியாறு லோயர் காம்ப் ஆகிய பகுதிகளில் முதலில் பணியாளர்கள் குடியிருப்பு போன்றவைகளுக்குக் கட்டிய கட்டிடங்கள், தற்போது என்ன உபயோகத்தில் இருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** மேலவை முன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

a Printed as Appendix IV on pages 138–139